இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

## முன்னோடி வினாத்தாள்

# மட்டம் 02

# 2803 – வணிகச் சட்டம் (BLA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்
# 2803 – வணிகச் சட்டம் (BLA)
# முன்னோடி வினாத்தாள்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்
விடையெழுத : 03 மணித்தியாலம்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C**.
- பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C** ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 25 |
| பகுதி B | 50 |
| பகுதி C | 25 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

**விடைகள்:**

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைத்தாள் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

**விடைத்தாள் புத்தகம்:**

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும்.
- மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
**பதினைந்து (15) கட்டாய வினாக்கள்**

**பகுதி A**

(மொத்தம் 25 புள்ளிகள்)

## *வினா 01*

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக :

**1.1** பின்வருவனவற்றில் இலங்கை அரசியலமைப்பின் முதன்மையான வகிபாகமாக இருப்பது எது?

(1) சர்வதேச ஒப்பந்தங்கள், வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தல்.

(2) நாட்டின் அதியுயர் சட்டமாகத் தொழிற்படல், அரசாங்கத்தின் வேலைச் சட்டகத்தைத் தாபித்தல் மற்றும் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தல்.

(3) இலங்கை இராச்சியங்களின் வரலாற்று ரீதியான அபிவிருத்தியைக் கோடிட்டுக் காட்டுதல்.

(4) சமய நிறுவனங்கள் மற்றும் கலாசார நடைமுறைகளுக்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

**1.2** பின்வருவனவற்றில் எந்த நீதிமன்றம் இலங்கையில் முதன்மையான குற்றவியல் நியாயாதிக்கத்தை கொண்டிருக்கிறது?

(1) மேன்முறையீட்டு நீதிமன்றம். (2) நீதிவான் நீதிமன்றம்.

(3) குடும்ப நீதிமன்றம். (4) மாவட்ட நீதிமன்றம்.

1.3 விற்பனை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர், விற்பனையாளரால் கொள்வனவு செய்யப்படுகின்ற அல்லது உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) நிச்சயமற்ற பொருள்கள். (2) ஏற்கனவேயுள்ள பொருள்கள்.

(3) குறித்த பொருள்கள். (4) எதிர்காலப் பொருள்கள்.

1.4 பின்வருவனவற்றில் 1927 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தினால் அடையாளங் காணப்பட்டவாறு ஒரு மாற்றத்தகு சாதனமாக **அமையாதது** எது?

(1) காசோலைகள். (2) வாக்குறுதிச் சீட்டுகள்.

(3) காசுக் கட்டளைகள். (4) மாற்றுண்டியல்கள்.

1.5 இலங்கைச் சட்டத்தின் கீழ் ஒரு மாற்றுண்டியல் தொடர்பாக ‘‘உரிய நேரத்தில் வைத்திருப்பவர்’’ என்பதை பின்வருவனவற்றில் எது சரியாக விபரிக்கிறது?

(1) தொலைந்துபோன மாற்றுண்டியல் ஒன்றைக் கண்டுபிடித்து, பணம் கோர முயற்சிக்கின்ற ஒரு நபர்.

(2) மாற்றுண்டியல் முதிர்வடைந்த பின்னர் அதனை வைத்திருக்கும் ஒரு நபர்.

(3) காலாவதியாவதற்கு முன் நன்னம்பிக்கையுடன், உரித்தில் எவ்வித குறைபாட்டையும் அறிவிக்காமல் மதிப்புக்காக மாற்றுண்டியலைப் பெறும் ஒரு நபர்.

(4) மாற்றுண்டியல் ஒன்றை வரைந்து அதனை புறக்குறிப்பிடாமல் வைத்திருக்கும் ஒரு நபர்.

1.6 பின்வருவனவற்றில் வலிதான மாற்றுண்டியல் ஒன்றின் ஓர் அம்சமாக **அமையாதது** எது?

(1) இது நிபந்தனையற்ற கட்டளைகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும்.

(2) இது எழுத்துபூர்வமாக இருத்தல் வேண்டும்.

(3) இது நீடித்த மையுடன் அச்சிடப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(4) இது அதை வழங்குபவரால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

இல. **1.7** தொடக்கம் **1.9** வரையுள்ள வினாக்களில் தரப்பட்ட ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. உமது விடையை **(சரியானது / தவறானது)** வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக.

**1.7** மத்தயஸ்தம், தீர்ப்பாயம் மற்றும் ஓம்புட்ஸ்மன் முறைமைத் தொழிற்பாடு போன்ற மாற்றுப் பிணக்குத் தீர்க்கும் (ADR) பொறிமுறையானது முறையான நீதிமன்ற முறைமையுடன் இணைந்து, பிணக்குகளைத் தீர்ப்பதற்கான விரைவானதும் மிகவும் நெகிழ்ச்சியானதுமான வழிகளை வழங்குகிறது.

**1.8** இலங்கையிலுள்ள பொதுச் சட்டமாக ஆங்கிலச் சட்டம் விளங்குகிறது.

**1.9** பொருள்களின் விற்பனை ஒப்பந்தம் என்பது விற்பனையாளர் பொருள்களின் உரிமையை வாங்குபவருக்கு ஒரு விலைக்கு மாற்றுகின்ற அல்லது மாற்ற ஒப்புக் கொள்கின்ற ஒரு உடன்படிக்கையாகும்.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

இல. **1.10** தொடக்கம் **1.14** வரையுள்ள வினாக்களுக்கான குறுகிய விடைகளை வினா இலக்கங்களுடன் உமது விடைத்தாள் புத்தகத்தில் எழுதுக :

1.10 பொருள்கள் விற்பனை ஒப்பந்தத்திற்கும் ஏனைய வகையான ஒப்பந்தங்களுக்கும் இடையேயான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

1.11 தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் இரண்டு (02) நோக்கங்களைப் பட்டியலிடுக.

1.12 காசோலை ஒன்றின் இரண்டு (02) வகையான குறுக்குக் கோடிடலைக் குறிப்பிடுக.

1.13 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படும் இரண்டு (02) வகையான கம்பனிகளைப் பட்டியலிடுக.

1.14 கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் (CSE) (02) தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

***பகுதி A முடிவு***

**ஐந்து (05) கட்டாய வினாக்கள்**

**பகுதி B**

(மொத்தம் 50 புள்ளிகள்)

### *வினா 02*

**திரு. யூ. ரியா** என்பவர் இலங்கைக்கு இரசாயன உரங்களை இறக்குமதி செய்யும் வியாபாரத்தை நடத்தி வருகிறார். அவர் ரூ. 100 மில்லியன் பெறுமதியான இரசாயன உரங்களை வியட்நாமிலிருந்து கொள்வனவு செய்ததுடன், பொருள்கள் **Sea Breeze** என்ற கப்பலைப் பயன்படுத்தி இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன. எவ்வாறாயினும், இலங்கைக்குள் இரசாயன உரங்களைப் பாவிப்பதற்கான எதிர்ப்பு அதிகரித்ததன் காரணமாக, கப்பலானது இந்தியக் கடற்கரைக்கு அருகில் கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்கு நிறுத்தப்பட்டது.

கப்பலின் கப்டன் **கப்டன் சில்வா,** கடலில் நீண்ட காலம் தங்கியிருப்பதால் உரக் கொள்கலன்கள் இரசாயன எதிர்வினைகளுக்கு ஆளாவதைக் கவனித்தார். மேலும் சேதமடைவதைத் தடுக்கவும் சாத்தியமான சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கவும் கருதி, தனது சொந்தப் பணத்தைச் செலவு செய்து, சென்னைத் துறைமுகத்தில் உரத்தை இறக்கி, களஞ்சியப்படுத்த முடிவு செய்தார். அவர் **திரு. யூ. ரியாவை** தொடர்பு கொண்டு, நிலைமை பற்றித் தெரிவிக்கப் பல முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், அது பலனளிக்கவில்லை.

இரண்டு வாரத்தின் பின்னர், பொருள்களை தொடர்ந்தும் களஞ்சியப்படுத்த அவரிடம் பணம் இருக்கவில்லை. இதனால் ரூ. 75 மில்லியனுக்கு உரத்தை விற்பனை செய்ய **கப்டன் சில்வா** முடிவு செய்தார். அதன் பின்னர் விற்பனை மூலமான வருமானத்தை **திரு. யூ. ரியாவுக்கு** அனுப்பியிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை ;**

(a) **கப்டன் சில்வா** தான் மேற்கொண்ட நடவடிக்கைகளை **திரு. யூ. ரியாவின்** சார்பாக ஒரு முகவராக செயற்பட்டதாகக் கூற முடியுமா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **கப்டன் சில்வா,** பொருட்களைக் களஞ்சியப்படுத்தியதற்கான பணத்தை **திரு. யூ. ரியாவிடமிருந்து** மீளப்பெற உரித்துடையவரா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 03*

**அநுர, பிமல்** மற்றும் **சமிக்க** ஆகியோர் இலங்கையில் "**கிறீன் பாஸ்கட்"** என்ற பெயரில் சுற்றுச் சூழலுக்கு உகந்த மளிகைக் கடைச் சங்கிலியொன்றை நடத்துவதற்காக ஒன்றாக ஒரு வணிகத்தை ஆரம்பித்தனர். அவர்கள் இலாபத்தைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள இணங்கியுள்ளனர். **அநுரவும் சமிக்கவும்** நாளாந்தச் செயற்பாடுகளை முகாமை செய்கின்றனர். **பிமல்** மூலதனத்தை முதலீடு செய்திருந்த போதிலும் மௌனமாகவும், முகாமைத் தீர்மானங்களில் ஈடுபடாமலும் இருந்தார்.

**அநுர** அல்லது **பிமலுக்குத்** தெரிவிக்காமல் **சமிக்க,** வணிகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் நிதியிடுவதற்காக **"கிறீன் பாஸ்கட்"** இன் பெயரில் வழங்குநர் ஒருவரிடமிருந்து ஒரு பெரியளவான கடனைப் பெற்றுக் கொண்டார். துரதிஷ்டவசமாக, விரிவுபடுத்தல் தோல்வியில் முடிவடைந்ததுடன், வணிகம் குறிப்பிடத்தக்க நட்டத்தையும் சந்தித்தது. வழங்குநர் தற்போது மூன்று பங்காளர்களிடமும் மீள்கொடுப்பனவைச் செலுத்துமாறு கோருகிறார்.

இதற்கிடையில், **பிமல்** தான் முகாமைத்துவத்திலோ அல்லது தீர்மானமெடுத்தலிலோ ஈடுபடுவதில்லை என்பதால் இதற்குத் தான் பொறுப்பல்ல எனக் கூறுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பங்குடமைச் சட்டத்தின் கீழ், **சமிக்கவினால்** எடுக்கப்பட்ட கடனுக்கு **பிமல்** பொறுப்பேற்க முடியுமா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **சமிக்கவின்** நடவடிக்கைகளின் சட்டபூர்வ நிலை மற்றும் வழங்குநர் பங்குடமையிடமிருந்து கொடுப்பனவை மீளப் பெற முடியுமா என்பன பற்றி **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 04*

**டிலானி** என்பவர் ஒரு கிராபிக் வடிவமைப்பாளர் ஆவார். அவர் நீடித்திருக்கத்தக்க உற்பத்திப் பொருள் பொதியிடலில் நிபுணத்துவமிக்க கம்பனியான **EcoPack (Pvt) Ltd.** இல் பணி புரிகிறார். அவர் வாரத்தில் ஐந்து நாட்கள் கம்பனி அலுவலகத்தில் பணி புரிகிறார், குறிப்பிட்ட வேலை நேரங்களைக் கடைப்பிடிக்கிறார், கம்பனி உபகரணங்களைப் பயன்படுத்துகிறார், மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு அறிக்கையிடுகிறார். அவர் நிலையான மாதாந்தச் சம்பளத்தையும் ஊதியத்துடன்கூடிய விடுப்பு (லீவு) நன்மையையும் பெறுகிறார்.

அதே நேரத்தில், ஒரு புதிய உற்பத்திப் பொருளை அறிமுகப்படுத்துவதற்கான விளம்பர காணொளிகளை உருவாக்குவதற்கென, ஒரு சுயாதீன காணொளி உருவாக்குநரான (video editor) **ருவான்** என்பவரை கம்பனி வாடகைக்கு அமர்த்தியுள்ளது. **ருவான்** வீட்டிலிருந்து வேலை செய்வதுடன், அவரது சொந்த உபகரணத்தையும் பயன்படுத்துகிறார். அத்துடன் அவர் தனது சொந்த வேலை நேர அட்டவணையையும் அமைத்துள்ளார். செயற்றிட்டமொன்று பூர்த்தியடைந்ததும் அவருக்கு கொடுப்பனவு செலுத்தப்படுகிறது. அவர் வேறு இரண்டு கம்பனிகளுக்கும் இதேபோன்ற சுயாதீன வேலைகளை மேற்கொள்கிறார்.

சமீபத்தில், பாதீட்டு வெட்டுகள் காரணமாக **டிலானி** மற்றும் **ருவான்** ஆகிய இருவரது சேவைகளையும் **EcoPack** கம்பனி முடிவுறுத்தியுள்ளது. **டிலானி** தொழிற் சட்டங்களின் கீழ் நட்டஈட்டை எதிர்பார்க்கிறார், ஆயினும் அவர் **ருவானைப்** போல ஒரு சுயாதீன ஒப்பந்ததாரர் எனக் கம்பனி கூறுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தொழிற் சட்டத்தின் கீழ், சேவை ஒப்பந்தத்திற்கும் (Contract of Service) சேவைகளுக்கான ஒப்பந்தத்திற்கும் (Contract for Services) இடையேயான சட்ட வேறுபாடுகளை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(b) **டிலானி** ஓர் ஊழியரா அல்லது ஒரு சுயாதீன ஒப்பந்ததாரரா என்பதையும் அவர் தொழில் பாதுகாப்புகளுக்கு உரித்துடையவரா என்பதையும் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 05*

**திரு. சேனக** தனது வீட்டை காப்புறுதி செய்யத் தீர்மானித்தார். அவர் 'காப்புறுதி முன்மொழிவுப் படிவத்தில்' கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தார். இறுதியாக, அவர் **SafeGuard Insurance PLC** இல் வீட்டுக் காப்புறுதியைப் பெற்றுக் கொண்டார். இக்காப்புறுதி திருட்டு காரணமாக ஏற்படும் சேதங்களை ஈடுசெய்கிறது. ஒரு நாள் இரவு, அவரது வீடு உடைக்கப்பட்டு, கொள்ளையர்கள் உள்ளே நுழையும் போது பல யன்னல்களையும் கதவுகளையும் சேதப்படுத்தியிருந்தனர். சில நாட்களுக்குப் பிறகு பெய்த கனமழை ஆனது சேதமடைந்த யன்னல்கள் வழியாக வீட்டினுள் வந்து, வீட்டின் உட்புறத்திற்கு குறிப்பிடத்தக்க நீர் சேதத்தை ஏற்படுத்தியது.

**திரு. சேனக** மொத்த சேதத்திற்குமான உரிமைக் கோரிக்கையைத் (claim) தாக்கல் செய்தார். எவ்வாறாயினும், **SafeGuard Insurance** முழுக் கோரிக்கையையும் ஈடுசெய்ய மறுத்து, கொள்ளை தொடர்பான சேதம் மட்டுமே காப்புறுதி செய்யப்பட்டுள்ளது என வாதிட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) காப்புறுதியின் இரண்டு (02) கோட்பாடுகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **SafeGuard Insurance PLC** முழுச் சேதத்திற்கு பொறுப்புடையதா என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 06*

(a) பணச் சலவை என்பது சட்டவிரோத நடவடிக்கைகளிலிருந்து சம்பாதிக்கப்பட்ட பணத்தின் சட்டவிரோத தோற்றத்தை மறைக்க, அதனை முறையான நிதி முறைமையினுள் அறிமுகப்படுத்தும் மோசடி முறைமை ஆகும். இது தொடர்பில், 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கப் பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தை இலங்கை அறிமுகப்படுத்தியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

இலங்கையின் பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வருகின்ற நான்கு (04) குற்றங்களைக் (சட்டவிரோத நடவடிக்கைகள்) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ், ஏற்பிசைவு செய்யப்பட்ட பல வகையான புலமைச் சொத்துக்கள் காணப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

புலமைச் சொத்துச் சட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பின்வரும் புலமைச் சொத்து வகைகளை **விபரிக்குக** :

(i) பதிப்புரிமை (Copy right).

(ii) வர்த்தக நாமங்கள் (Trade Names). (04 புள்ளிகள்)

(c) 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டம் இலங்கையின் நிதி முறைமையில் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதிலும் பணச் சலவைத் தடுப்பு (AML) மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்துப் போராடுவதிலும் (CFT) சர்வதேச நியமங்களுடன் நாட்டை இணைப்பதிலும் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டத்தின் இரண்டு (02) நோக்கங்களைக் (Objectives) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *பகுதி B முடிவு*

**ஒரு (01) கட்டாய வினா**

**பகுதி C**

(மொத்தம் 25 புள்ளிகள்)

***வினா 07***

(A) புகழ்பெற்ற தொழில்முறைப் பிரபலமான மரபுவழி வயலின் இசைக் கலைஞரான **களனி பெரேரா,** இலங்கையிலுள்ள முக்கிய நகரங்களில் மதிப்புமிக்க இரண்டு மாத இசைநிகழ்ச்சிச் சுற்றுப் பயணத்தில் பங்கேற்க **Golden Stage Productions (Pvt) Ltd** உடன் எழுத்துபூர்வ உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார். ஒப்பந்தம் கீழுள்ளதை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது :

*"முதலாவது நிகழ்ச்சி இடம்பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள ஐந்து முழு நாட்கள் தொழினுட்ப ஒத்திகைகளிலும் **களனி பெரேரா** கலந்து கொள்ள வேண்டும்."*

இந்த ஒத்திகைகள் ஒளி மற்றும் ஒலிப் பொறியியலாளர்களுடன் ஒருங்கிணைப்பதற்கு மிகவும் முக்கியமானவைகளாகும். ஒத்திகைகள் தொடங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர், **களனி பெரேராவுக்கு** இலேசான ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டது. மேலும், மருத்துவ ஆலோசனையின் பேரில், அவர் முதல் இரண்டு நாட்கள் ஒத்திகையைத் தவறவிட்டார். அவர் விரைவாகக் குணமடைந்து இறுதி மூன்று நாட்கள் ஒத்திகையில் கலந்து கொண்டார். இறுதியான முழு அரங்க நிகழ்விலும் குறைபாடற்ற முறையில் அவர் நிகழ்வுகளை நடத்தியிருந்தார். அவர் இசை நிகழ்ச்சிக்கு முழுமையாகத் தயாராகி இருந்தார்.

எவ்வாறாயினும், **Golden Stage Productions** ஒப்பந்தத்தை முடிவுறுத்தியது. தவறவிட்ட ஒத்திகைகள் உடன்படிக்கையின் அத்தியாவசியமான விதிமுறையை மீறுவதாக உள்ளதெனக் கூறப்பட்டது. தவறவிடப்பட்ட நாட்கள் ஒரு நிபந்தனையை மீறுவதாக இல்லை எனவும் மாறாக ஒரு உத்தரவாதத்தையே மீறுவதாகவும், ஒப்பந்தப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியை வழங்குவதில் அவர் முழுமையாக இயலுமையுடையவராக இருப்பதாகவும் வாதிட்டு **களனி பெரேரா** வழக்குத் தொடர்ந்தார்.

தனியாக, அச்சிடப்பட்ட கீழே குறிப்பிடப்படும் ஒரு சரத்தையும் ஒப்பந்தம் உள்ளடக்கியிருந்தது:

*"ஏதாவது சூழ்நிலைகளில் கலைஞர்களை இரத்துச் செய்வதால் அல்லது மாற்றுவதால் எழுகின்ற எந்தவொரு கோரிக்கைகள் அல்லது நட்டஈட்டிற்கும் கம்பனி பொறுப்பேற்காது."*

**Golden Stage Productions** இந்தச் சரத்தினை நம்பி, பணி முடிவுறுத்தல் நியாயமற்றதாக இருந்தாலும்கூட அவர்கள் எந்தப் பொறுப்பையும் ஏற்கப்போவதில்லை என வாதிட்டனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒப்பந்த மீறலுக்காக நிவாரணத்தை எதிர்பார்க்கும் தரப்பினருக்குக் கிடைக்கக்கூடிய மூன்று (03) "ஒப்பந்தப் பரிகாரங்களைக்" **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) தவறவிடப்பட்ட ஒத்திகை நாட்கள் நிபந்தனை அல்லது உத்தரவாதத்தை மீறுவதாக இருந்ததா, மேலும் **Golden Stage Productions** ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதில் நியாயமாகச் செயற்பட்டுள்ளதா என்பவற்றை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) ஒப்பந்தத்தில் உள்ள விதிவிலக்கான சரத்து, இந்த வழக்கில் **Golden Stage Productions** ஐ பொறுப்பிலிருந்து பாதுகாக்குமா என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(B) **ஸ்ரீ-புர வைத்தியசாலையின்** மருந்து வழங்கல் பிரிவின் தலைவரான **வைத்தியர் லேகா Medi-Co Ltd.** என்ற வழங்குநரின் களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்ட மருந்து மாதிரியைப் பரிசீலித்ததன் பின்னர் ஒரு குறிப்பிட்ட நோயெதிர்ப்பு மருந்தின் 1000 பெட்டிகளைப் பெற ஓடர் செய்தார். காட்சிப்படுத்தப்பட்ட மாதிரி ஒரு புகழ்பெற்ற மருந்துக் கம்பனியிடமிருந்து முத்திரையிடப்பட்டு (sealed), சிட்டை (labeled) ஒட்டப்பட்டிருந்தது. அதன் நம்பகத்தன்மையை நம்பிய **வைத்தியர் லேகா,** இந்த மாதிரியின் அடிப்படையில் கொள்வனவை இறுதி செய்தார். எவ்வாறாயினும், விநியோகம் செய்யப்பட்டவுடன், வைத்தியசாலைக்கு வேறு உற்பத்தியாளரிடமிருந்து மருந்துப் பெட்டிகள் கிடைக்கப் பெற்றன. அவை சரியான சான்றிதழ் இல்லாமலும், சரியாகப் பொதி செய்யப்படாமலும் இருந்தமையானது அந்த மருந்தின் செயற்றிறன் மற்றும் பாதுகாப்பு பற்றிய சந்தேகங்களை எழுப்பின.

ஒரு தனியான தனிப்பட்ட பரிவர்த்தனையில், **வைத்தியர். லேகா** உள்நாட்டு விற்பனையாளரான **திரு. வாங்கா** என்பவரிடமிருந்து ஒரு பழைய (second-hand) சொகுசுக் காரை வாங்கினார். இந்த விற்பனையாளர் வெளித்தோற்றத்தில் சட்டபூர்வமானதாகத் தோன்றும் உரிமை ஆவணங்களைச் சமர்ப்பித்திருந்தார். சில வாரங்களுக்குப் பின்னர், சட்ட அமுலாக்க அதிகாரிகள் அவரை அணுகினர். கார் திருடப்பட்ட ஒரு ஆதனமாக அறிக்கையிடப்பட்டிருப்பதை அவர்கள் வெளிப்படுத்தினர். உண்மையான உரிமையாளர் உரிமைக்கான சட்டபூர்வ ஆதாரத்தைச் சமர்ப்பித்திருந்தார். இதனால், **வைத்தியர் லேகா** வாகனத்தை ஒப்படைக்க வேண்டியிருந்தது. இதன் மூலம் அவருக்கு நிதிசார்ந்த இழப்பு ஏற்பட்டதுடன் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Medi-Co Ltd. இன்** வழங்குநர், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழான உட்கிடை நிபந்தனையை மீறியுள்ளாரா என்பதை **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(b) கார் விற்பனையாளரான **திரு. வாங்கா** பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழான நிபந்தனையை மீறியுள்ளாரா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## *பகுதி C முடிவு*

# செயல் வினைச் சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல்

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br><br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br><br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விபரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br><br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்குக (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்குக (Present) | தகவல்களை பயனுறுதி மிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு**<br><br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br><br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br><br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |

SRI LANKA

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# மட்டம் 02

# 2803 – வணிகச் சட்டம் (BLA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
**கட்டாய வினாக்கள்**

**பகுதி A**

(மொத்தம் 25 புள்ளிகள்)

***வினா 01 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

1.1 2 1.4 3

1.2 2 1.5 3

1.3 4 1.6 3 **(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)**

1.7 சரியானது

1.8 தவறானது

1.9 சரியானது **(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

1.10

| | **பொருள்கள் விற்பனை ஒப்பந்தம்** | **ஏனைய ஒப்பந்தங்கள்** |
|---|---|---|
| **உரிமை மாற்றம்** | பொருள்களின் உரிமை மாற்றம் மீது பிரதான கவனம் | உரிமை மாற்றத்தில் ஈடுபடலாம் அல்லது ஈடுபடாமல் இருக்கலாம். |
| **விடயப் பொருள்** | பொருள்களின் உரிமை மாற்றம் | சேவை மற்றும் தொழில் கடன்களுடன் தொடர்புபட முடியும். |
| **வாங்குபவரின் எதிர்பார்ப்பு** | வாங்குபவர் விற்பனையாளரிடமிருந்து எவ்வித நிபுணத்துவத்தையோ அல்லது ஆற்றலையோ எதிர்பார்ப்பதில்லை. | வாங்குபவர் விற்பனையாளரிடமிருந்து சில தனிப்பட்ட நிபுணத்துவத்தை அல்லது ஆற்றலை எதிர்பார்க்கிறார். |

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.11

- அதிகாரமளிக்கப்படாத அணுகல், தவறான பயன்பாடு மற்றும் வெளிப்படுத்துகையில் இருந்து இலங்கையில் உள்ள தனியாட்களின் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்கு.
- தரவுகள் சட்டபூர்வமாக, நேர்மையாக மற்றும் பொறுப்புணர்வுடன் செயன்முறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு இலங்கையின் டிஜிடல் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கு வசதியளித்தல்.
- இந்தத் தனிப்பட்ட தரவுகள் மற்றும் அதன் பயன்பாடு தொடர்பான பல்வேறு உரிமைகள் மீது தனிநபர்களுக்கு அதிகக் கட்டுப்பாட்டை வழங்குவதற்கு.

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.12

- பொதுவான குறுக்குக் கோடிடல்.
- விசேட குறுக்குக் கோடிடல். **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.13

- வரையறுக்கப்பட்ட கம்பனிகள்.
- வரையறுக்கப்படாத கம்பனிகள்.
- உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள். **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.14

- மூலதனவாக்கத்திற்கு வசதியளித்தல்.
- பிணையங்களுக்கான ஒரு சந்தையை வழங்குதல்.
- திரவத்தன்மையை உறுதி செய்தல்.
- விலையைக் கண்டறிதல்.
- முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவித்தல்.
- கண்காணித்தலும் ஒழுங்குவிதியும்.
- தகவல் பரப்புதல். **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## *பகுதி A முடிவு*

**ஐந்து (05) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 50 புள்ளிகள்)

**பகுதி B**

***வினா 02 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 4 -** முகவராண்மைச் சட்டம்

கற்றற் பேறுகள் - முதல்வர் - முகவர் உறவு எந்தச் சூழ்நிலைகளில் ஏற்பிசைவு செய்யப்படும் என்பதை விபரித்தல்

- முதல்வர், முகவருக்கிடையிலான கடமைகளையும் உரிமைகளையும் விபரித்தல்
- தனது முகவர்களால் செய்யப்படும் செயல்களுக்கு அரசின் பொறுப்பை விபரித்தல்

**(a)** **திரு. யூ. ரியாவுடன்** ஒரு முகவராண்மை உறவினை **கப்டன் சில்வா** கோர முடியுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு, உட்கிடை முகவராண்மை வகையான அவசியத்தன்மை மூலமான முகவராண்மை என்ற எண்ணக்கரு பற்றி கவனத்திற் கொள்ளுதல் அவசியமானதாகும்.

பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும்போது அவசியத்தன்மை மூலமான முகவராண்மை தோற்றம் பெறுகிறது :

(1) உண்மையான அவசர நிலைமை காணப்படுதல்.

(2) முகவர் முதல்வருடன் தொடர்புகொள்ள முடியாதிருத்தல்.

(3) முகவர் நன்னம்பிக்கை அடிப்படையிலும் முதல்வரின் சிறந்த நாட்டத்தின் அடிப்படையிலும் செயற்படல்.

(4) முதல்வரின் ஆதனத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையானதும் நியாயமானதுமான நடவடிக்கைகளை எடுத்தல்.

(5) முதல்வர் இதற்கு முரணாக முன்கூட்டியே வெளிப்படையான அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கக் கூடாது.

**இந்த விவரணத்தில் :**

- உரங்கள் உள்ள கொள்கலன்களில் இடம்பெறும் இரசாயன எதிர்வினைகள் காரணமாக அவை கணிசமான சேதம் அல்லது இழப்புக்கான இடர்களைக் கொண்டிருப்பது ஒரு தெளிவான அவசரகால நிலைமை ஆகும்.
- **திரு. யூ. ரியா**வைத் தொடர்புகொள்ள **கப்டன் சில்வா** பல தடவைகள் முயற்சித்துள்ளார். ஆனால் அவருக்கு எவ்வித பதில்களும் கிடைக்கவில்லை. இது தொடர்புகொள்ள இயலாமைக்கான நிலைமையைத் திருப்திப்படுத்துகிறது.
- சென்னை துறைமுகத்தில் பொருள்களை களஞ்சியப்படுத்தும் அவரது முடிவு அவரது சொந்தச் செலவில் செய்யப்பட்டதாகும். இது அவர் நன்னம்பிக்கை அடிப்படையில் செயற்பட்டிருப்பதை வெளிக்காட்டுகிறது.
- மேலும் இரண்டு வாரங்கள் தொடர்பின்றி இருந்ததன் பின்னர், தொடர்ந்தும் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான போதிய பணம் இல்லாததால், அவர் உரத்தை விற்பனை செய்வதற்கான தீர்மானத்தை எடுத்திருந்தார். இது பொருள் மேலும் சீரழிவதையும் இழப்பு ஏற்படுவதையும் தடுப்பதற்கான ஒரு நியாயமான நடவடிக்கை ஆகும்.

மேலும், அவர் ரூ. 75 மில்லியன் வருமானத்தை **திரு. யூ. ரியாவுக்கு** அனுப்பியுள்ளார். இது அவர் சொந்த இலாபத்திற்காக அல்லாமல் **திரு. யூ. ரியாவின்** நாட்டத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்பட்டிருக்கிறார் என்ற முடிவை வலுப்படுத்துகிறது.

எனவே, மேற்படி விடயங்களின் அடிப்படையில், முகவராண்மைச் சட்டத்தின் கீழ், **கப்டன் சில்வாவின்** நடவடிக்கைகள் சட்டரீதியாக நியாயப்படுத்தத்தக்கதாக இருப்பதால், அவர் அவசியத்தன்மை மூலமான முகவராண்மைக்கு கோரிக்கையிட முடியும்.

**(06 புள்ளிகள்)**

**(b)** ஆம், **கப்டன் சில்வா, திரு. யூ. ரியாவிடமிருந்து** களஞ்சியப்படுத்தலுக்கான செலவுகளை மீளப் பெறுவதற்கு உரித்துடையவர்.

அவசியத்தன்மை மூலமான முகவராண்மைக் கோட்பாட்டின் கீழ், முகவர் (இந்தச் சம்பவத்தில் **கப்டன் சில்வா**), முதல்வரின் (**திரு. யூ. ரியா**வின்) ஆதனத்தைப் பாதுகாப்பதற்கு நன்னம்பிக்கையின் அடிப்படையில் செயற்படும்போது செலவழித்த எந்தவொரு நியாயமான செலவினத்தையும் மீளப்பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார்.

ஆதலால்:

- சேதமடைவதைத் தடுப்பதற்கு களஞ்சியப்படுத்தல் அவசியமாக இருந்தது.
- **திரு. யூ. ரியாவின்** பதிலின்மை காரணமாக செலவு செய்யப்பட்டது.
- இந்தச் சூழ்நிலையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நியாயமானதும் சமநிலையானதும் ஆகும். எனவே **கப்டன் சில்வா, திரு. யூ. ரியாவிடமிருந்து** அதற்கான செலவுகளை மீளளிக்குமாறு சட்டரீதியாகக் கோர முடியும். **(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 03 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| |
|---|
| **அலகு 5** - நிறுவனச் சட்டமும் பங்குடமைச் சட்டமும் |
| கற்றற் பேறுகள் - பங்காளர்களுக்கும் மூன்றாந் தரப்பினர்களுக்கும் இடையிலான தொடர்பைக் குறிப்பிடுதல் |
| - பங்காளர் ஒருவரின் பொறுப்புகளை பட்டியலிட்டு, விபரித்தல் |

**(a)** பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், ஒரு பங்குடமை என்பது இலாப நோக்கத்துடன் பொதுவில் ஒரு வியாபாரத்தை நடத்திச் செல்வதற்கு இணங்கிக் கொண்ட நபர்களுக்கிடையேயான ஓர் உறவாகும். பங்குடமை வியாபாரம் தொடர்பில் ஏற்படுகின்ற கடன்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு அனைத்துப் பங்காளர்களும் கூட்டாகப் பொறுப்புடையவர்கள்.

**இந்த விவரணத்தில் :**

- **அநுர, பிமல், சாமிக்க** ஆகியோர் இலாபத்தைப் பங்கிட்டுக் கொண்டு, வியாபாரம் ஒன்றை நடத்துவதற்கு ஒப்புக்கொண்டு, ஒன்றாகச் சேர்ந்து வலிதான பங்குடமை ஒன்றை நிறுவியுள்ளனர்.
- **பிமல்** மூலதனத்திற்குப் பங்களித்துள்ளதுடன், இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளவும் உரித்துடையவராக உள்ளார். இது அவர் நாளாந்தச் செயற்பாடுகளில் பங்குபற்றாமல் இருப்பதைப் பொருட்படுத்தாது அவர் ஒரு பங்காளர் என்ற நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது.
- பங்குடமைச் சட்டத்தின் கீழ், ஒரு பங்காளர் நிறுவனத்தினதும் அவரது ஏனைய பங்காளர்களினதும் முகவராக இருக்கிறார். வணிகத்தின் நோக்கெல்லைக்குள் ஒரு பங்காளரால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் முழு நிறுவனத்தையும் பிணைக்கிறது.
- நிறுவனத்தின் பெயரிலும் வியாபார விரிவாக்கத்திற்காகவும் **சாமிக்கவினால்** கடன் பெறப்பட்டிருப்பதால் அது வழமையான வணிக நடைமுறையினுள் வருகிறது.

எனவே, முகாமையில் பங்கேற்கவில்லை என்பதற்காக **பிமல்** பொறுப்பிலிருந்து இலகுவாகத் தப்பிக்க முடியாது. ஒரு பங்காளர் என்ற வகையில், **சாமிக்க** எடுத்த கடன் உள்ளிட்ட பங்குடமையின் கடன்களுக்கு அவர் கூட்டாகவும் பலவிதமாகவும் பொறுப்பாவார். **(06 புள்ளிகள்)**

**(b)** **சாமிக்கவின்** நடவடிக்கைகள் பங்குடமை வியாபாரத்தின் (மளிகைப் பொருள் சங்கிலியை விரிவாக்குதல்) நோக்கெல்லையினுள் வருவதுடன் அவர் பங்குடமையின் பெயரிலும் செயற்பட்டுள்ளார். பங்குடமைச் சட்டத்தின் கீழ் :

- வழக்கமான வணிக நடைமுறைகளில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளில் நிறுவனத்தைப் பிணைப்பதற்கு ஒரு பங்காளர் உட்கிடையான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார்.
- **சாமிக்க** இந்த அதிகாரத்திற்கு வெளியே செயற்பட்டாலன்றி (எ.கா. தனிப்பட்ட பாவனைக்காக பணம் கடன் பெறுவது அல்லது சம்பந்தமற்ற நடவடிக்கைகள்), நிறுவனமானது அவரது நடவடிக்கையால் பிணைக்கப்படுகிறது.
- **சாமிக்கவுக்கு** அதிகாரம் இல்லை என வழங்குநர் நம்புவதற்கு எவ்வித காரணமும் இல்லாததால், நிறுவனம் வழங்குநருக்கு பொறுப்புடையதாகும்.

எனவே, கடன் பங்குடமைக்கு எதிராகச் செயற்படுத்தப்படக்கூடியது என்பதுடன் வழங்குநர் **அநுர, பிமல், சாமிக்க** உள்ளிட்ட அனைத்துப் பங்காளர்களிடமிருந்தும் கூட்டாக திருப்பிச் செலுத்தக் கோரலாம். **(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 04 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 7** - தொழிற் சட்டம்

கற்றற் பேறுகள் - ஊழியர் மற்றும் சுயாதீன ஒப்பந்ததாரரை இனங்காண்பர், பொருத்தமான சோதனைகளைப் பயன்படுத்தி ஊழியரையும் சுயாதீன ஒப்பந்ததாரரையும் வேறுபடுத்துதல்

**(a)** தொழிற் சட்டத்தின் கீழ், ஒரு நபர் ஒரு ஊழியராகவா அல்லது ஒரு சுயாதீன ஒப்பந்ததாரராகவா வகைப்படுத்தப்படுகிறார் என்பதைத் தீர்மானிப்பதில் சேவை ஒப்பந்தம் மற்றும் சேவைகளுக்கான ஒப்பந்தத்தை வேறுபடுத்தி அறிவது முக்கியமானதாகும்.

- சேவை ஒப்பந்தம் என்பது ஒரு தொழில் உறவைக் குறிக்கிறது. அங்கு ஒரு நபர் தொழில்தருநரின் வழிகாட்டல், கட்டுப்பாடு, மற்றும் மேற்பார்வையின் கீழ் பணியாற்றுகிறார். பணி முடிவுறுத்தல் நன்மைகள், EPF/ETF பங்களிப்புகள் மற்றும் ஊதியத்துடனான விடுப்பு போன்ற சட்டநியதிப் பாதுகாப்புகளுக்கு உரித்துடையவர்.
- சேவைகளுக்கான ஒப்பந்தம் என்பது சுய தொழில் செய்து கொண்டே ஒரு சேவை நாடுநருக்கு குறிப்பிட்ட சேவைகளை வழங்குகின்ற ஒரு சுயாதீன ஒப்பந்ததாரர் அல்லது சுதந்திரப் பணியாளருடனான ஓர் ஏற்பாட்டைக் குறிக்கிறது. இந்த வகை ஒப்பந்தங்களின் கீழான தனிநபர்கள் பொதுவாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் பெரும்பாலான தொழிற் சட்டப் பாதுகாப்புகள் உரித்துடையவை அல்ல.

**(04 புள்ளிகள்)**

**(b)** வேலை உறவின் தன்மையைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றங்கள் பொதுவாக வெவ்வேறு சோதனைகளைப் பிரயோகிக்கின்றன :

(1) கட்டுப்பாட்டுச் சோதனை – வேலை எவ்வாறு, எப்போது, எங்கு செய்யப்படுகிறது என்பதை தொழில்தருநர் கட்டுப்படுத்துகிறாரா?

(2) ஒருங்கிணைப்புச் சோதனை – நபர் நிறுவவனத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளாரா?

(3) பொருளாதார யதார்த்தச் சோதனை – நபர் வணிக இடரைத் தாங்கிக் கொண்டு, அவருடைய சம்பாத்தியத்தைக் கட்டுப்படுத்துகிறாரா?

(4) உபகரணச் சோதனை – தனிநபர் தனது சொந்தக் கருவிகள் உபகரணத்தை பயன்படுத்துகிறாரா?

**சட்டச் சோதனைகளை விடயங்களுக்குப் பிரயோகித்தல் :**

- கட்டுப்பாட்டுச் சோதனை : **டிலானி** மேற்பார்வையின் கீழ் பணி புரிகிறார், கம்பனியின் வேலை நேரங்களைப் பின்பற்றுகிறார், முகாமையாளருக்கு அறிக்கை செய்கிறார். இது தொழில்தருநரின் உயர் மட்டக் கட்டுப்பாட்டைக் குறிக்கிறது.
- ஒருங்கிணைப்புச் சோதனை : அவர் கம்பனி வளாகத்தில் பணி புரிகிறார், நாளாந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார். இது அவர் கம்பனிக் கட்டமைப்பினுள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளதைக் காட்டுகிறது.
- பொருளாதார யதார்த்தச் சோதனையும் உபகரணச் சோதனையும் : **டிலானி** கம்பனியின் உபகரணத்தைப் பயன்படுத்துவதுடன், நிலையான மாதாந்தச் சம்பளத்தையும் பெறுகிறார். அத்துடன் ஊதியத்துடனான விடுப்புக்கும் அவர் உரித்துடையவர். இந்த அனைத்து அம்சங்களும் ஓர் ஊழியரின் உறவாகும்.

இதற்கு நேர்மாறாக, **ருவான்** தனது சொந்த அட்டவணையை அமைத்திருந்தார், தனது சொந்தக் கருவிகளைப் பயன்படுத்தினார், பல சேவைநாடுநர்களுக்கு வேலை செய்தார், அவருக்கு செயற்றிட்டத்தின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது. இவை அவர் ஒரு சுயாதீனப் பணியாளர் என்பதையும் அவர் சேவைகளுக்கான ஒப்பந்தத்தின் கீழ் பணியாற்றுவதையும் குறிக்கின்றன.

எனவே, **டிலானி** சேவை ஒப்பந்தத்தின் கீழ் பணியாற்றுகிறார். இது அவரை ஓர் ஊழியராக ஆக்கியுள்ளது. எனவே, பணி முடிவுறுத்தப்பட்டதும் அறிவிப்பு அல்லது இழப்பீடு உள்ளிட்ட தொழிற் சட்டப் பாதுகாப்புகளுக்கு அவர் உரித்துடையவர். ஏனெனில் அவர் அக்கம்பனியின் ஓர் ஊழியராவார்.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 05 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| |
|---|
| **அலகு 8 - காப்புறுதிச் சட்டம்** |
| கற்றற் பேறுகள் - மீயுயர் நன்னம்பிக்கை, காப்புறுத்தத்தக்க நாட்டம், இழப்பீடு, நெருக்கமான காரணம், மற்றும் பற்றுரிமை மாற்றீடு உட்பட காப்புறுதி ஒப்பந்தத்திலுள்ள பொருத்தமான கோட்பாடுகளை விபரித்தல் |

**(a)**

- **காப்புறுத்தத்தக்க நாட்டம் :**

  காப்புறுதி ஒப்பந்தம் காப்புறுத்தத்தக்க நாட்டத்தால் ஆதரிக்கப்பட வேண்டும் இல்லையெனின், காப்புறுதி ஒப்பந்தம் வலிதற்றதாகிவிடும். அதற்கிணங்க, காப்புறுத்தத்தக்க நாட்டத்தை காப்புறுதி அளிப்பவரின் விடயப் பொருளை காப்புறுதி செய்யும் உரிமையாக வரையறுக்கலாம்.

- **இழப்பீடு :**

  காப்புறுதி செய்யப்பட்டவர் தனக்கு ஏற்படும் இழப்பிற்கு இழப்பீடு பெற உரித்துடையவர். ஆனால் இதைவிட அதிகமாக இல்லை என்ற கருத்து இது. வேறு வகையாகக் கூறுவதாயின், இது நட்டம் அல்லது ஏற்பட்ட சேதத்திற்கு நன்மை செய்கின்ற அல்லது ஈடு செய்கின்ற ஒன்றாகும். காப்புறுதியிலிருந்து இலாபம் ஈட்டக்கூடாது. காப்புறுதி ஒப்பந்தங்களில் காப்புறுதி அளிப்பவர் காப்புறுதி செய்யப்பட்டவரின் உண்மையான இழப்புத் தொகையை காப்புறுதியில் உள்ளடக்கப்பட்ட தொகை வரை செலுத்தி காப்புறுதி செய்யப்பட்டவருக்கு இழப்பீடு வழங்குகிறார்.'

- **கடன் பற்றுரிமை மாற்றீடு :**

  காப்புறுதி செய்யப்பட்ட ஆதனத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பை காப்புறுதி அளிப்பவர் தீர்த்து வைக்கும்போது, வெளிவாரியான தரப்பினர்களிடமிருந்து காப்புறுதி செய்யப்பட்டவர் பெறக்கூடிய பிற அனுகூலங்கள் மற்றும் உரிமைகளை காப்புறுதி அளிப்பவருக்கு மாற்றுவது கடன் பற்றுரிமை மாற்றீடு என அழைக்கப்படுகிறது. இந்த எண்ணக்கரு இழப்பீட்டுக் கோட்பாட்டின் ஒரு விளைவாக எழுகிறது.

- **மிகுந்த நல்லெண்ணக் கோட்பாடு (utmost good faith):**

  காப்புறுதி அளிப்பவருக்கு எதுவும் தெரியாது, காப்புறுதி செய்யப்பட்டவருக்கு எல்லாம் தெரியும் என்பதால், 'அனைத்துப் பொருள் நிலைமைகளையும்' கேட்காமல் முழுமையான வெளிப்படுத்தலைச் செய்வதில் நல்லெண்ணத்தை செயற்படுத்த காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் நபருக்கு விதிக்கப்பட்ட கடமை இதுவாகும். எனவே, காப்புறுதி செய்யப்பட்டவர் தனக்குத் தெரிந்த அனைத்தையும் மட்டுமல்லாமல், காப்புறுதி அளிப்பவர் தான் பொறுப்பேற்கும் இடரைச் சரியாக மதிப்பிடுவதற்கு அவர் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(b)** இந்த விவரணத்தில், **SafeGuard Insurance PLC** விரிவான சேதத்திற்கு நெருங்கிய காரணம் கனமழைதான், கொள்ளை அல்ல என்று வாதிடலாம். காப்புறுதிச் சட்டத்தில், நெருங்கிய காரணம் இழப்பிற்கு நேரடியாக வழிவகுக்கின்ற ஆதிக்கம் செலுத்தும் அல்லது மிகவும் பயனுறுதிமிக்க காரணத்தைக் குறிக்கிறது.

காப்புறுதியானது கொள்ளை தொடர்பான சேதத்தை மாத்திரமே உள்ளடக்கியிருப்பதாலும் மழை போன்ற இயற்கைக் கூறுகளால் ஏற்படும் சேதங்களை உள்ளடக்காததாலும் காப்புறுதி அளிப்பவர் நீர் சேதத்திற்கான பொறுப்பை ஏற்க மறுக்கலாம்.

எவ்வாறாயினும், கொள்ளையானது நேரடியாக யன்னல்களை உடைத்து, பின்னர் மழை நீர் உள்ளே நுழைந்து உட்புறத்தைச் சேதப்படுத்த அனுமதித்திருப்பின், ஆரம்பத்தில் காப்புறுதி செய்யப்பட்ட ஆபத்து (கொள்ளை) முழு நிகழ்வுகளின் சங்கிலியினதும் நெருங்கிய காரணமாகக் கருதலாம். அத்தகைய சூழ்நிலையில் நீர் சேதத்தை கொள்ளையின் இயற்கையான பின்விளைவாகக் காணலாம். எனவே, இழப்புக்கு வழிவகுக்கும் நிகழ்வுகளின் சங்கிலியை இயக்கியது கொள்ளைதான் என்பதைக் காட்ட முடிந்தால், நீர்த் சேதம் உள்ளிட்ட முழு சேதத்திற்கும் ஈடுசெய்யும் பொறுப்பு **SafeGuard Insurance** இற்கு இருக்கலாம். **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 06 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள***

| | |
|---|---|
| **அலகு 9** | **- வணிகச் சூழலுடன் தொடர்புடைய குற்றங்களும் புதிய ஒழுங்குவிதிகளும் மற்றும் பிணையங்களின் வர்த்தகம்** |
| கற்றற் பேறுகள் - | வணிகச் சூழல் குறித்த தொடர்புடைய சட்டங்களின் (பணச்சலவைத் தடுப்புச் சட்டம், தகவல் உரிமைச் சட்டம், நிதிப் பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டம், புலமைச் சொத்துச் சட்டம், இலத்திரனியல் பரிவர்த்தனைகள் சட்டம், தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டம்) பிரயோகத்தை இனங்கண்டு, விபரித்தல் |

**(a)**

(1) போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள்

(2) ஆட்கடத்தல்.

(3) இலஞ்சம்.

(4) பரிமாற்றக் கட்டுப்பாட்டு மீறல்கள்.

(5) பயங்கரவாதம்.

(6) நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள்.

(7) இணையக் குற்றங்கள், துப்பாக்கிச் சூடு ஒழுங்குவிதிகளின் கீழான குற்றங்கள், வெடிபொருள்கள்.

(8) சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள்.

(9) மரண தண்டனை அல்லது சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்கள்.

(10) பிரமிட் மோசடிகள். **(01 புள்ளி வீதம், 04 புள்ளிகள்)**

**(b) (i)** **பதிப்புரிமை :** படைப்பாளர்களின் பாரம்பரிய, கலை மற்றும் விஞ்ஞானப் படைப்புகளுக்கு வழங்கப்படும் பொருளாதார மற்றும் தார்மீக ரீதியான உரிமைகள் பதிப்புரிமைகள் என அழைக்கப்படுகின்றன. புலமைச் சொத்துச் சட்டத்தின் பிரிவு 06 இற்கிணங்க, படைப்பாளர்கள் பொருளாதார மற்றும் தார்மீக உரிமைகளுக்கு உரித்துடையவர்கள். **(02 புள்ளிகள்)**

**(ii)** **பண்டக்குறி :** ஒரு நிறுவனத்தின் பொருள்களை ஏனைய நிறுவனங்களின் பொருள்களிலிருந்து வேறுபடுத்துகின்ற எந்தவொரு அடையாளம், சொல், சின்னங்கள், சாதனங்கள், வண்ணங்கள், வடிவங்கள் அல்லது இரண்டினது கலவைகள் என்பன 'பண்டக்குறி' என வரையறுக்கப்படலாம். **(02 புள்ளிகள்)**

**(c)**
- பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியுதவியைத் தடுத்தல் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளைக் கண்டறிதல்.
- பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஆகிய குற்றங்களை விசாரித்து, வழக்குத் தொடர ஒரு அதிகாரசபையை நிறுவுதல்.
- பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்துப் போராடுவதற்கு சில நிறுவனங்கள் உரிய விடாமுயற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *பகுதி B முடிவு*

**ஒரு (01) கட்டாய வினா**

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

***வினா 07 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 2 - ஒப்பந்தச் சட்டம்**

**அலகு 3 - பொருள்கள் விற்பனைச் சட்டம்**

கற்றற் பேறுகள் - ஒப்பந்த விதிமுறைகள் (நிபந்தனைகள், உத்தரவாதங்கள், விலக்களிப்பு வாசகங்கள்) மற்றும் விலக்களிப்பு வாசகங்களின் விளைவுகள், அத்துடன் 1997 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்ட நியாயமற்ற ஒப்பந்த விதிமுறைகளை விளக்குதல்

- ஒப்பந்த மீறுகைக்கான பரிகாரங்களை ஆராய்தல்
- இடர் கடந்து செல்கின்ற மற்றும் உரித்து மாற்றம் நிகழ்கின்ற காலம் பற்றி ஆராய்தல்
- வாங்குபவர் மற்றும் விற்பவருக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரங்களை விபரிப்பர்.

**(A) (a)**

- சேதங்களுக்கான நடவடிக்கை எடுத்தல்.
- குறிப்பிட்ட செயற்பாட்டிற்காக வழக்குத் தொடருதல்.
- இரத்துச் செய்தல்.
- உரிமைக் கட்டளைக்காக வழக்குத் தொடருதல்.
- சீர்திருத்தம் [பிழைதிருத்தம்]. **(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

**(b)** ஒப்பந்தச் சட்டத்தில், ஒரு நிபந்தனை என்பது ஒப்பந்தத்தின் மூலாதாரத்திற்குச் செல்லும் ஒரு அடிப்படைப் பதம் ஆகும். ஒரு நிபந்தனையை மீறுவது அப்பாவித் தரப்பினர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தி, சேதத்திற்கு உரிமைக் கோரிக்கை செய்ய அனுமதிக்கிறது. மறுபுறம், ஓர் உத்தரவாதம் என்பது ஒரு சிறிய பதம் ஆகும். அதன் மீறலானது சேதங்களுக்கான கோரிக்கைக்கு மட்டுமே வழிவகுக்கிறது, முடிவுறுத்தலுக்காக அல்ல.

**இந்த விவரணத்தில் :**

- அனைத்து ஐந்து நாட்களும் தொழினுட்ப ஒத்திகைகளில் கலந்துகொள்ள வேண்டும் என்ற சரத்து ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது தரப்பினர்களுக்கு முக்கியமானதாகக் கருதப்பட்டது என்பதைக் குறிக்கிறது.
- எவ்வாறாயினும், **களனி பெரேரா** மருத்துவக் காரணங்களால் முதல் இரண்டு நாட்கள் மாத்திரம் கலந்து கொள்ளாது தவற விட்டுள்ளார். மீதமிருந்த அமர்வுகளில் உடனடியாகவே கலந்து கொண்டுள்ளார்.
- அவர் இறுதி முழு அரங்க நிகழ்வில் குறைபாடற்ற முறையில் நிகழ்ச்சி நடத்தியுள்ளதுடன் நிகழ்ச்சிக்கான சுற்றுப்பயணத்திற்கு முழுமையாகத் தயாராகி இருந்தார்.
- அவர் கலந்து கொள்ளாமல் இருந்தது ஒப்பந்தத்தின் நோக்கம் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கவில்லை.

தவறவிட்ட நாட்கள் **களனி பெரேராவின்** ஒட்டுமொத்த தயார்நிலையையோ அல்லது நிகழ்ச்சியின் தரத்தையோ பாதிக்கவில்லை என்பதால், அந்தச் சரத்தானது ஒரு நிபந்தனையாக அல்லாமல், உத்தரவாதமாக இருக்கலாம். எனவே, **Golden Stage Productions** ஒப்பந்தத்தைத் தவறாக முடிவுறுத்தியிருக்கலாம். **(06 புள்ளிகள்)**

**(c)** தொடர்புடைய விதிவிலக்கான சரத்தானது கீழ்வருமாறு கூறுகிறது :

*“ஏதாவது சூழ்நிலைகளில் கலைஞர்களை இரத்துச் செய்வதால் அல்லது மாற்றுவதால் எழுகின்ற எந்தவொரு கோரிக்கைகள் அல்லது நட்டஈட்டிற்கும் கம்பனி பொறுப்பேற்காது.”*

இத்தகைய சரத்துக்கள் விதிவிலக்கான அல்லது புறந்தள்ளலான சரத்துக்கள் என அழைக்கப்படுகின்றன. மேலும் அவற்றின் செல்லுபடித்தன்மை பல சட்டக் கோட்பாடுகளைப் பொறுத்து அமைந்துள்ளன :

(1) **கூட்டிணைப்பு** – சரத்தானது எழுத்துபூர்வ உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே இது ஒப்பந்த ரீதியாக செல்லுபடியாகும்.

(2) **தெளிவு** – வார்த்தைகள் பரந்த அளவில் ("ஏதாவது சூழ்நிலைகளில்") உள்ளன. ஆனால் நீதிமன்றங்கள் பொதுவாக அத்தகைய சரத்துக்களைக் குறுகியதாகப் பொருள் கொள்கின்றன. குறிப்பாக ஒரு தரப்பினர் கணிசமாக அதிக பேரம்பேசும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் குறுகியதாகப் பொருள் கொள்கின்றன.

(3) **அநியாயமான அல்லது நியாயமற்ற பதங்கள்** – இந்தச் சரத்தானது நியாயமற்ற முடிவுக்கு வழிவகுத்தால் (எ.கா. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கும் ஒரு கலைஞருக்கு கொடுப்பனவை வழங்க மறுப்பது), நீதிமன்றங்கள் அதைத் தள்ளுபடி செய்யலாம் அல்லது அதன் நோக்கெல்லையைக் மட்டுப்படுத்தலாம்.

(4) **அடிப்படை மீறல்** – கடுமையான மீறல் ஏற்பட்டாலும்கூட விதிவிலக்கான சரத்துகள் இன்னும் பொருந்தக்கூடும் என்பதை நவீன சட்டம் ஏற்றுக் கொள்கிறது - ஆனால் சரத்து தெளிவாகவும் வெளிப்படையாகவும் நிகழ்ந்த குறிப்பிட்ட வகை மீறலை உள்ளடக்கியிருந்தால் மட்டுமே.

**இந்த விவரணத்தில் :**

- இந்தச் சரத்தானது **Golden Stage productions** இனைப் பொறுப்பிலிருந்து பாதுகாக்கக்கூடும். ஆனால், **களனி பெரேரா** நிகழ்ச்சியை நடத்துவதற்கான தகுதியைப் பெற்றிருந்த போதிலும் தவறாக பணி முடிவுறுத்தப்பட்ட சூழ்நிலைக்கு இந்தச் சரத்தைப் பிரயோகிப்பது நியாயமற்றதென நீதிமன்றங்கள் கருதலாம்.
- எனவே, தவறாக பணி முடிவுறுத்தப்பட்ட இந்தச் சந்தர்ப்பத்தில் நியாயமற்ற தன்மை, சாத்தியமான தவறான பயன்பாடு குறித்த கவலைகள் காரணமாக **Golden Stage Productions** இனை பொறுப்பிலிருந்து முழுமையாகப் பாதுகாக்க இந்தச் சரத்திற்கு சாத்தியமில்லை. **(06 புள்ளிகள்)**

**(B)**

**(a)** ஆம், **Medi-Co Ltd.** இன் வழங்குநர், மாதிரியின் அடிப்படையிலமைந்த விற்பனை தொடர்பான பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழான உட்கிடை நிபந்தனை மீறியுள்ளார்.

பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், மாதிரியை அடிப்படையாகக் கொண்டு பொருள்கள் விற்பனை செய்யப்படும்போது, அங்கு ஒரு உட்கிடையான நிபந்தனை காணப்படுகிறது.

(1) மொத்தமும் தரத்தில் மாதிரியை ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

(2) வாங்குபவருக்கு மொத்தத்தையும் மாதிரியுடன் ஒப்பிட்டுப் பார்க்க நியாயமானளவு வாய்ப்பு இருத்தல் வேண்டும்.

(3) மாதிரியின் நியாயமான பரிசோதனையில் பொருள்கள் வெளிப்படையாகத் தெரியாத எந்தவொரு குறைபாடும் இல்லாதிருத்தல் வேண்டும்.

இந்தச் சூழலில், **வைத்தியர் லேகா** வழங்குநரின் களஞ்சியத்தில் ஒரு மருந்து மாதிரியை ஆய்வு செய்தார். எவ்வாறாயினும், விநியோகிக்கப்பட்ட மருந்துப் பெட்டிகள் மாதிரியில் காணப்பட்ட அதே உற்பத்தியாளரிடமிருந்து வந்தவை அல்ல என்பதுடன் முறையான சான்றிதழோ, பொதியிடலோ அங்கு காணப்படவில்லை. இது தரம் மற்றும் அடையாளம் (மாதிரியின் விபரம்) தொடர்பில் மாதிரியிலிருந்து தெளிவான வேறுபாட்டைக் குறிக்கிறது. எனவே உட்கிடை நிபந்தனை மீறப்பட்டுள்ளது.

எனவே, **வைத்தியர் லேகா** (அல்லது வைத்தியசாலை) பொருள்களை நிராகரிப்பதற்கான உரித்தைக் கொண்டிருப்பதுடன் ''மாதிரியின் அடிப்படையிலான விற்பனை'' என்ற உட்கிடை நிபந்தனையின் கீழ் ஒப்பந்தத்தை மீறியதற்காக பணத்தைத் திரும்பப் பெற அல்லது இழப்பீடு கோர உரித்தைக் கொண்டுள்ளார். **(05 புள்ளிகள்)**

**(b)** ஆம், கார் விற்பனையாளர் **திரு. வாங்கா,** விற்பனை செய்வதற்கான உரிமை என்ற பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் அடிப்படை நிபந்தனையை மீறியுள்ளார்.

பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 14(a) இன் கீழ், விற்பனையாளருக்கு பொருள்களை விற்பதற்கான உரிமையுண்டு என்ற உட்கிடை நிபந்தனை உள்ளது. விற்பனையாளர் உண்மையான உரியையாளர் இல்லையெனின், அல்லது விற்பதற்கான அதிகாரம் இல்லையெனின், வாங்குபவர் எந்த உரிமையையும் பெற மாட்டார். அத்துடன் உண்மையான உரிமையாளர் பொருட்களை மீட்டெடுக்கலாம்.

தரப்பட்ட விவரணத்தில், **வைத்தியர் லேகா, திரு. வாங்கா**விடமிருந்து ஒரு காரைக் கொள்வனவு செய்துள்ளார். அந்தக் கார் திருடப்பட்ட கார் என அறிக்கையிடப்பட்டிருப்பதால், அவர் சட்டபூர்வ உரிமையாளர் அல்ல என மாறியது. உண்மையான உரிமையாளர் காரை மீட்டெடுத்தார். அதாவது விற்பனையாளருக்கு காரை விற்பதற்கான உரிமை இல்லை.

இது கடுமையான நிபந்தனை மீறலாகும். எனவே பின்வருவனவற்றை மேற்கொள்ள **வைத்தியர் லேகா**வுக்கு உரித்துள்ளது :

- ஒப்பந்தத்தை நிராகரிப்பதற்கு,
- காரைக் கொள்வனவு செய்ய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு,
- விற்பனையாளரிடமிருந்து சாத்தியமான இழப்பீட்டைக் கோருவதற்கு (கண்டறியக்கூடிய மற்றும் கடன் தீர்க்கும் ஆற்றல் இருப்பின்). **(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## *பகுதி C முடிவு*